# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

| | | |
|---|---|---|
| Case No | : | SC. 114/2021 |
| Prosecution Witness | : | PW-10 |
| Name | : | சசிகலா |
| Husband Name | : | ஜார்ஜ் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 48 |

***Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 26.09.2024***

***1ம் எதிரி ஆஜர். 2 மற்றும் 3ம் எதிரிகள் வருகை.***

**அரசு தரப்பில் முதல் விசாரணை** :-

நான் பள்ளியகிரகாரம் காந்தி நகரில் வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலைக்கு செல்கிறேன். வழக்கில் இறந்துபோன குணசீலன் என்பவரை எனக்கு தெரியும். அவர் எங்கள் பக்கத்து வீட்டை சேர்ந்தவர். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். போலிசார் என்னை வீட்டில் வந்து விசாரித்தார்கள். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு 28.5 அன்று நான் கூலிவேலைக்கு போய்விட்டு இரவு 8.00 மணிக்கு வீட்டிற்கு வந்தேன். அப்போது இறந்துபோன குணசீலன் வீட்டில் கும்பலாக இருந்தது. மோனிசாவிடம் என்ன என்று விசாரித்தேன். மணிகண்டன் அவரது அத்தை மகன் 3 பேரும் வின்சென்ட வீட்டின் பின்புறம் பாத்ரூம் அருகில் வைத்து அடித்து கொன்றார்கள் என்று சொல்லி அழுதார். சம்பவத்திற்கு 10 நாட்களுக்கு முன்பு எனக்கு அம்மை போட்டிருந்தது. அப்போது மணிகண்டன் வீட்டிற்கும் குணசீலன் வீட்டிற்கும் சண்டை நடந்தது எனக்கு நேரடியாக தெரியும். அவர்கள் எனது பக்கத்து வீடு தான். என்ன சண்டை என்று தெரியாது.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

இல்லை.

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.

# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

| | | |
|---|---|---|
| Case No | : | SC. 114/2021 |
| Prosecution Witness | : | PW-11 |
| Name | : | கரோலின் |
| Husband Name | : | சகாயராஜ் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 47 |

***Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 26.09.2024***

***1ம் எதிரி ஆஜர். 2 மற்றும் 3ம் எதிரிகள்வருகை.***

**அரசு தரப்பில் முதல் விசாரணை** :-

நான் பள்ளியகிரகாரம் காந்திநகரில் வசித்து வருகிறேன். எனது கணவர் பெயர் சகாயராஜ். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன குணசீலன் என்பவரை எனக்கு தெரியும். அவர் எங்கள் பக்கத்து வீட்டில் தான் வசித்தார். ஆஜர் எதிரிகளில் மணிகண்டனை மட்டும் தெரியும் மற்ற இருவரை எனக்கு தெரியாது. வழக்கு சம்பந்தமாக எனக்கு சம்மன் வந்தது. போலிசார் என்னை வீட்டில் வந்து விசாரித்தார்கள். கொலை நடந்த அன்று நான் வேலைக்கு சென்றுவிட்டேன். வேலை முடிந்து வீட்டிற்கு வந்தபிறகு தான் தெரிந்தது.

**அரசுதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி சாட்சியை பகுதிபிறழ்சாட்சியாக அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

எங்கள் ஊரில் காளியம்மன்கோவில் இருக்கிறது. அந்த கோவிலில் 17.5.2020 அன்று இறந்துபோன குணா ஒரு தரப்பாகவும் ஆஜர் எதிரி மணிகண்டன் ஒரு தரப்பாகவும் இருந்து வாய் தகறாறு ஏற்பட்டு சண்டை நடந்தது என்றும் மறுநாள் மறுபடியும் மணிகண்டன் மற்ற ஆஜர் எதிரிகளுடன் குணா வீட்டில் வந்து தகறாறு செய்ததாகவும் போலிசாரிடம் சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுக்கு பயந்து

**அவர்களுக்கு சாதகமாக அவர்களை காப்பாற்றுவதற்காக நீதிமன்றத்தில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**<u>எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>**

**இல்லை.**

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.

# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

| | | |
|---|---|---|
| Case No | : | SC. 114/2021 |
| Prosecution Witness | : | PW-12 |
| Name | : | சகாயராஜ் |
| Father Name | : | சந்தாணம் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

***Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 26.09.2024***

***1ம் எதிரி ஆஜர். 2 மற்றும் 3ம் எதிரிகள்வருகை.***

**அரசு தரப்பில் முதல் விசாரணை** :-

நான் பள்ளியகிரகாரம் காந்திநகரில் வசித்து வருகிறேன். அசா11 எனது மனைவி. நான் கூலி வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன குணசீலனை எனக்கு தெரியும். அவர் எங்கள் பக்கத்து வீட்டில் வசிக்கிறார். ஆஜர் எதிரி மணிகண்டனை எனக்கு தெரியும். சம்பவத்தன்று நான் கூலி வேலைக்கு சென்றிருந்தேன். வேலை முடிந்து இரவு 8.00 மணிக்கு வந்தேன். அப்போது ஜெயசீலன் வீட்டில் கும்பலாக இருந்தது. ஜெயசீலனின் அம்மா, அக்கா மோனிசா எல்லோரும் அழுதுகொண்டிருந்தார்கள். அவர்களிடம் என்ன சம்பவம் என்று கேட்டேன். யாரோ அவரை அடித்துக்கொன்றதாக சொன்னார்கள். யார் என்று சொல்லவில்லை.

**அரசுதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி சாட்சியை பகுதிபிறழ்சாட்சியாக அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

எங்கள் ஊரில் காளியம்மன்கோவில் இருக்கிறது. அந்த கோவிலில் 17.5.2020 அன்று இறந்துபோன குணா ஒரு தரப்பாகவும் ஆஜர் எதிரி மணிகண்டன் ஒரு தரப்பாகவும் இருந்து வாய் தகறாறு ஏற்பட்டு சண்டை நடந்தது என்றும் மறுநாள் மறுபடியும் மணிகண்டன் மற்ற ஆஜர் எதிரிகளுடன் குணா வீட்டில் வந்து தகறாறு செய்ததாகவும் போலிசாரிடம் சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுக்கு பயந்து

அவர்களுக்கு சாதகமாக அவர்களை காப்பாற்றுவதற்காக நீதிமன்றத்தில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>**

இல்லை.

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.